©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 23, 2009
புரட்டாசி 7, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 21, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J2) துறை, நாள்: 27 பிப்ரவரி 2009.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1946) 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும், 9 ஆம் பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், முந்திரி தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிப்பது தொடர்பாக, விசாரணைகள் மேற்கொள்ளவும், மாநில அரசுக்கு ஆலோசனை வழங்கவும் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை இதனால் நியமிக்கிறார்.

**தனிப்பட்ட நபர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் | .. | தலைவர் |
| (2) | தொழிலாளர் நல ஆய்வாளர் நாகர்கோவில் | .. | செயலாளர் |
| (3) | உதவி இயக்குநர், பொருளாதாரம்<br>மற்றும் புள்ளியியல் ஆணையாளர்<br>அலுவலகம், சென்னை–600 006. | .. | உறுப்பினர் |

**வேலை அளிப்பவரின் பிரதிநிதி :**

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. டி.ஆர். செல்வராஜ் செட்டியார்,<br>திருவாளர் டி.ஆர். வெங்கடாசலம் செட்டி,<br>எண். 65, கும்பகோணம் சாலை,<br>பண்ருட்டி–607 106.<br>கடலூர் மாவட்டம் | .. | உறுப்பினர் |
| (2) | திரு. ப்பி. அனில்குமார், மேலாளர்,<br>பிரகாஷ் எக்ஸ்போர்ட்ஸ்,<br>அதனம் கோட்டை,<br>புதுக்கோட்டை மாவட்டம். | .. | உறுப்பினர் |

(3) டாக்டர், E. அசாயி,
கிறிஸ்டல் முந்திரி தொழிற்சாலை,
மலைக்கோடு,
மலமாரி அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம். .. உறுப்பினர்

**தொழிலாளர்களின் பிரதிநிதி :**

(1) திரு. ப்பி. ஜே.எஸ்.ப்.பி. ஜோஸ்,
இந்திய தேசிய வர்த்தக யூனியன் காங்கிரஸ்.
கஞ்சிராபுரம், கஞ்சிரகோடு,
கன்னியாகுமரி மாவட்டம்—629 155. .. உறுப்பினர்

(2) திரு. கே.சி. துரைராஜ்,
அனைத்திந்திய வர்த்தக யூனியன் காங்கிரஸ்,
6/190, குளம்பெட்டி வெளி வீடு,
சம்பரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்—629 154. .. உறுப்பினர்

(3) திரு. எஸ். இரச வன்னியன்,
தொழிலாளர் முற்போக்கு முன்னணி,
த/பெ. எம். சாமிக்கண்ணு,
சி—7, சுவாமி விவேகானந்தர் சாலை,
பிளாக் 3, நெய்வேலி—617 801,
கடலூர் மாவட்டம். .. உறுப்பினர்

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர், (பொறுப்பு)*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 52,* தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் *(J2) துறை, நாள்: 22 மே 2009.]*

தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (1) உட்பிரிவின் (a) பகுதியின் படியும் 9—ம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், வீட்டுவேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்களை நிர்ணயிப்பது குறித்து, விசாரணைகள் நடத்தவும் மாநில அரசிற்கு ஆலோசனைகள் நல்கவும், பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை இதனால் நியமனம் செய்கிறார்:—

**தனி நபர்கள்:**

(1) தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்—1, சென்னை .. தலைவர்

(2) தொழிலாளர் நல ஆய்வாளர்—3, சென்னை .. செயலாளர்

(3) உதவி இயக்குநர், பொருளாதாரம்
மற்றும் புள்ளியியல் ஆணையாளர் அலுவலகம் .. உறுப்பினர்

**வேலையளிப்பவரின் பிரதிநிதிகள் :**

(1) திரு. டி. வேல்ராஜ்,
5/1B, சக்தி விநாயகர் நகர்,
நிலை—II, வெள்ளாளூர்,
கோயம்புத்தூர்—641 111. .. உறுப்பினர்

(2) திரு. எஸ். இராமமூர்த்தி,
151/8, கோல்டன் ஜூப்ளி ப்ளாட்ஸ்,
அண்ணாநகர் மேற்கு,
சென்னை—600 040. .. உறுப்பினர்

(3) திரு. ப்பி. செல்லதுரை,
3, ஜெயாநகர், ஹைகிரவுண்ட்ஸ்.
திருநெல்வேலி—627 011. .. உறுப்பினர்

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள் :**

(1) திருமதி. எம். பேபி, (தொழிலாளர் முன்னேற்ற அணி)
க/பெ. மண்ணாதன்,,
7—கி, பிளாக், திரு.வி.க. குடியிருப்பு,
தேனாம்பேட்டை, சென்னை—600 018. .. உறுப்பினர்

(2) திருமதி. ப்பி. சொரூபராணி,
(இந்திய தேசிய வர்த்தக சங்க காங்கிரஸ்)
3/2 B.B. அம்மன் கோவில் 4—வது சந்து
மூலகொத்தளம்,
சென்னை—600 021. .. உறுப்பினர்

(3) திருமதி. எம். பகவதி,
(இந்திய வர்த்தகச் சங்கம் மையம்)
52, குக்ஸ் சாலை,
பெரம்பூர், சென்னை—600 012. .. உறுப்பினர்

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர், (பொறுப்பு)*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## திருத்த அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 61, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (H1) துறை, நாள்: 3 ஜூன் 2009.]*

தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைபடுத்துதலும், நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 35—வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும், நீக்குதலும்) விதிகளுக்குப் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 35 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,

(A) 24 ஆம் விதியின் (1) துணை விதியில் "ரூ. 50" என்பதற்குப் பதிலாக ரூ.100/— (ரூபாய் நூறு மட்டும்)" என்று அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(B) 26 ஆம் விதியில், (1) மற்றும் (2) துணை விதிகளுக்குப் பதிலாக பின்வரும் துணை விதிகள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்; அதாவது;


DTP-II-2-37 (T Sup)—2

"(1) 7 ஆம் பிரிவின் கீழ் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு இருக்கும், அவையாவன:—

யாதொரு நாளில் ஒப்பந்த அடிப்படை.யில் பணியமர்த்தப்படுவதற்கு கருதப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை:—

| | ரூ. |
|---|---|
| (a) 20—க்கு மிகாமல் இருக்குமாயின் | 200 |
| (b) 20—க்கும் கூடுதலாக ஆனால் 50—க்கு மிகாமல் இருக்குமாயின் | 400 |
| (c) 50—க்கும் கூடுதலாக ஆனால் 100—க்கு மிகாமல் இருக்குமாயின் | 1,000 |
| (d) 100—க்கும் கூடுதலாக ஆனால் 200—க்கு மிகாமல் இருக்குமாயின் | 2,000 |
| (e) 200—க்கும் கூடுதலாக ஆனால் 400—க்கு மிகாமல் இருக்குமாயின் | 4,000 |
| (f) 400—க்கும் அதிகமாக இருக்குமாயின் | 6,000 |

"(2) 12 ஆம் பிரிவின் கீழ் உரிமம் பெறுவதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு இருக்கும், அவையாவன:—

யாதொரு நாளில் ஒப்பந்த அடிப்படை.யில் பணியமர்த்தப்படுவதற்கு கருதப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை:—

| தொழிலாளர்களின் எண்ணிக்கை. | ரூ. |
|---|---|
| (a) 20—க்கு மிகாமல் இருக்குமாயின் | 100 |
| (b) 20—க்கும் கூடுதலாக ஆனால் 50—க்கு மிகாமல் இருக்குமாயின் | 150 |
| (c) 50—க்கும் கூடுதலாக ஆனால் 100—க்கு மிகாமல் இருக்குமாயின் | 200 |
| (d) 100—க்கும் கூடுதலாக ஆனால் 200—க்கு மிகாமல் இருக்குமாயின் | 300 |
| (e) 200—க்கும் கூடுதலாக ஆனால் 400—க்கு மிகாமல் இருக்குமாயின் | 400 |
| (f) 400—க்கும் அதிகமாக இருக்குமாயின் | 500 |

(C) 25 ஆம் விதியின் 3 ஆம் துணை விதியில் ``கட்டணத்தில் 75 சதவீதம்" என்ற தொடருக்குப் பதிலாக "அதே போன்ற" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(D) 30 ஆம் விதியில் "ரூ. 25/—"என்பதற்குப் பதிலாக ரூ. 50/— (ரூபாய் ஐம்பது மட்டும்) என்று அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர், (பொறுப்பு)*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 91, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (G2) துறை, நாள்: 10 ஜூலை 2009.]*

தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

2. இதனால் செய்யப்படும் திருத்தங்கள், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**திருத்தங்கள்**

**(1)** மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த **11** - A ஆம் விதியில், இரண்டு இடங்களில் காணப்படுகிற ‘‘ரூபாய் ஐந்து’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ``ரூபாய் ஏழு" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

**(2)** ‘‘ரூபாய் பத்து’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ரூபாய் பதினான்கு’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர், (பொறுப்பு)*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.